අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

THE OFFICE ON MISSING PERSONS

# பதவி வெற்றிடங்கள்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலகமாகும்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பதவிகளுக்காக ஏற்கனவே பொதுச் சேவை, பகுதியான அரச அல்லது கூட்டுத்தாபனங்கள் துறையில் பொருத்தமான தகைமைகளையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## நிதி மற்றும் வழங்கல் பெறுகை பிரிவுத் தலைவர் (பதவி 01) HM 1-1

## HEAD OF FINANCE AND PROCUREMENT

**பதவியின் விபரம்: :** நிதி மற்றும் வழங்கல் பிரிவின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை கண்காணித்தல் மற்றும் தொடர்புடைய நிதி மற்றும் கொள்முதல் கொள்கைகள் நடைமுறைகள் மற்றும் அமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் அனைத்து நிதி மற்றும் கொள்முதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட நிதி/கணக்கியல்/வணிக நிர்வாகம/வணிகம்/மேலாண்மை (நிதி) ஆகியவற்றில் இளங்கலைப் பட்டம் அல்லது குறித்த துறையில் தொடர்புடைய வேறு ஏதனும் பட்டம் **அத்துடன்** தொடர்புடைய துறையில் முதுகலை பட்டப்படிப்பு தகுதி (முதுநிலை) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினர், தொடர்படைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறைசார் பட்டய நிறுவனத்தின் முழு உறுப்பினர் **மற்றும்** அரச அல்லது இணை அரசசேவை நிறுவனம் ஒன்றில் அல்லது பெயர்போன தனியார் நிறுவனம் ஒன்றில் 'முகாமைத்துவ மட்டத்தில்' குறைந்தது 13 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமான பதவிகளில் உள்ள அபேட்சகர்களுக்கு உச்சபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-

வாகனம் மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்காக மேலதிக கொடுப்பனவுகளுக்கும் ஏனைய கூட்டிணைந்த கொடுப்பனவுகளுக்கும் உரித்து உண்டு.

**குறிப்பு :** தாபனக் குறியீட்டில் வழங்கப்பட்டுள்ளதன்படி, இடமாற்றம் /இரண்டாம் நிலை/ஒப்பந்த அடிப்படையில் OMP இல் நியமனம் செய்வதற்கு தகுதியான/தகுதியுள்ள அலுவலர்கள் பரிசீலிக்கப்படுவார்கள்.

## முகாமைத்துவ உதவியாளர் (பதவி 07) MA 1-1

## Management Assistant

**பதவியின் விபரம் :** அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் செயல்பாடுகள் / செயல்பாடுகளின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களில் கலந்து கொள்வது மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவ, நிர்வாக மற்றும் நிறைவேற்று தரங்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதி / ஆதரவு உள்ளடக்கிய பணிகளுக்குத் துணைபுரிதல்.

**தகைமைகள்:**

அ) க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

ை) சிங்களம் / தமிழ்

ைை) ஆங்கில மொழி

ைைை) கணிதம்

ஆ) க.பொ.த (உ/த) பரீட்சையில் (பொது உளச்சார்பு வினாத்தாள் தவிர்ந்த) ஏனைய மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

இ) மனிதவள முகாமைத்துவம் /அலுவலகவியல/ நிருவாகவியல் கற்கைளில் டிப்புளோமா பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்

**வயதெல்லை:** 18 வயதுக்குக் குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.27,910 – 10 x 300 – 7 x 350 – 4 x 495 – 20 x 660 – 48,540/-

**குறிப்பு :** தாபனக் குறியீட்டில் வழங்கப்பட்டுள்ளதன்படி, இடமாற்றம் /இரண்டாம் நிலை/ஒப்பந்த அடிப்படையில் OMP இல் நியமனம் செய்வதற்கு தகுதியான/ தகுதியுள்ள அலுவலர்கள் பரிசீலிக்கப்படுவார்கள்.

අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
THE OFFICE ON MISSING PERSONS

# பதவி வெற்றிடங்கள்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலகமாகும்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பதவிகளுக்காக பொருத்தமான தகைமைகளையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பாதிக்கப்பட்டவர் மற்றும் குடும்ப ஆதரவு வழங்கல் தலைவர் (பதவி 01) HM 1-1

## Head of Victim and Family Support

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப ஆதரவு அலகு மேற்கொள்கின்ற செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் தொடர்புடைய உபாய செயன்முறைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் நிபுணர்கள் ஆய்வு செய்வதற்கேற்ற முறைகளை ஒழுங்கமைத்தல், உளவியல்ரீதியான ஆதரவுக்காகவும் சமூக சேவை நடவடிக்கைகளுக்கும் மேற்கொள்ளப்படுகின்ற உபாயத் திட்டங்கள் மற்றும் மீளாய்வு சார்ந்த பணிகளை முன்னெடுத்தலும் செயற்படுத்தலும்

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட உளவியல்/ உளவளத் துணை மற்றும் உளவியல/ மெய்யியல் மற்றும் உளவியல/ சமூக விஞ்ஞானம் / சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் ஆகிய துறையொன்றில் இளங்கலை பட்டம். **அத்துடன்** குறித்த துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் (முதுமாணி) பட்டம். **அத்துடன்** அரச அல்லது இணை அரசசேவை நிறுவனம் ஒன்றில் அல்லது பெயர்போன தனியார் நிறுவனம் ஒன்றில் 'முகாமைத்துவ மட்டத்தில்' குறைந்தது 12 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமான பதவிகளில் உள்ள அபேட்சகர்களுக்கு உச்சபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.80,295 – 15 x 2,270 – 114,345/-
வாகனம் மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்காக மேலதிக கொடுப்பனவுகளுக்கும் ஏனைய கூட்டிணைந்த கொடுப்பனவுகளுக்கும் உரித்து உண்டு.

## சபைச் செயலர்.'. சிரேஸ்ட சட்ட அலுவலர் (பதவி 01) MM 1-1

## Secretary to the Board / Senior Legal Officer

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் சபைச் செயலராகப் பணியாற்றுவதற்கான பொறுப்பு வகித்தல்

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெற்றுக்கொண்ட சட்டத் துறையில் பட்டம். **அத்துடன்** சத்திய பிரமாணம் செய்த சட்டத்தரணி ஒருவராவும் இருத்தல் வேண்டும். அத்துடன் முதலாவது பட்டப் படிப்பின/ சத்தியப் பிரமாணத்தின் பின் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவரகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமான பதவிகளில் உள்ள அபேட்சகர்களுக்கு உச்சபட்ச வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத் திட்டம்:** ரூ.53,175 – 10 x 1,375- 15 x 1,910 – 95, 575/-

**மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பதவிகளுக்குமான பொதுவான விடயங்கள்:**

- அனைத்து விண்ணப்பதாரிகளும்,
  - ✓ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
  - ✓ உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
  - ✓ நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - ✓ சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- கணினி தொடர்பான அறிவு மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- எங்களால் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினையே பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- தற்போது வரையில் அரச சேவையில் அல்லது பகுதியளவான அரச சேவையில் பணி புரிபவராயின் உரிய கூட்டுத்தாபனத்தின் அல்லது திணைக்களத்தின் தலைவரினூடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்குள் விண்ணப்பதாரிகளினால் அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகளினால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் நேர்முக சபையினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட உயர் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்
- இந்த பதவியானது நிரந்தரமாவதுடன், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியமும் உரித்துடையதாகும்.
- விண்ணப்பங்கள், உரிய சான்றிதழ்களின் பிரதியுடன் **2024 மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு** முன்னர் **நிறைவேற்றுப் பணிப்பாளர், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இல.40, 03 ஆவது மாடி, புத்கமுவ வீதி, ராஜகிரிய** என்ன முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ

அல்லது நேரடியாகவோ கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த**
தவிசாளர்
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்